கோரிக்கை எண் 47—மாநில அரசு வழங்கும் கடன்களும், முன் பணங்களும்

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—

"கோரிக்கை எண் 47—மாநில அரசு வழங்கும் கடன்களும், முன் பணங்களும் என்ற தலைப்பின் கீழ் ரூ. 6,00,000-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்.

நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

(3) அறிவிப்புகள் (தொடர்ச்சி)

(ஆ) தமிழ் நாடு 1972-ம் ஆண்டு நிதி ஒதுக்க (4-ம் எண்) சட்ட முன்வடிவு.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு 1972-ம் ஆண்டு நிதி ஒதுக்க (4-ம் எண்) சட்ட முன்வடிவை பேரவையில் அறிமுகம் செய்யவும் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளவும் மேதகு ஆளுநர் அவர்கள் தம் இசைவினை அளித்துள்ளார்கள்.

(6) அரசினர் சட்ட முன்வடிவுகள் (தொடர்ச்சி)

(ஆ) தமிழ் நாடு 1972-ம் ஆண்டு நிதி ஒதுக்க (4-ம் எண்) சட்ட முன்வடிவு.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, தமிழ்நாடு 1972-ம் ஆண்டு நிதி ஒதுக்க (4-ம் எண்) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, நான் இந்தச் சட்ட முன்வடிவை அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, பேரவை மீண்டும் நாளைக் காலை 9 மணி அளவில் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1.09-க்கு ஒத்திவைக்கப்பட்டது.